

# அமரர். பாக்கியம் கந்தையா

அவர்களின்

# நினைவு மலர்

10.06.2023

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்

1931
-
05
-
04

மறைவு

2022
-
05
-
11

## அமரர். பாக்கியம் கந்தைய்யா

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சோபகிருது மாதம் சித்திரை தேய்பிறை பூண்ட
சப்தமி திதியதனில் நீண்ட வாழ்வுடைய
கந்தையா பாக்கியம் இவ்வுலகம் போதும் என்று
இறைவன் அடி சேர்ந்தார் என்றியம்பு.

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மல்லாகத்தை பிறப்பிடமாகவும்
திருகோணமலை சாம்பல்தீவை வசிப்பிடமாகவும்
கொண்ட

# அமரர். திருமதி. கந்தையா பாக்கியம்

அவர்களின் அந்தியேட்டி

# நினைவிதழ்

**10.06.2023**

# சமர்ப்பணம்!

எங்கள் குடும்பத் தலைவியே

எங்களைப் பெற்று வளர்த்து

உற்ற வழிகாட்டி உயர் தந்து

ஊர் மெச்ச வாழவைத்த

உங்களை உயிர் உள்ளவரை

நினைத்து நினைத்து பெருமை கொள்வோம்

தெய்வத்துள் தெய்வமாகச் சங்கமித்து

நிலையான அழிவில்லாப் பெருவாழ்வு பெற்ற

அமரர் கந்தைய்யா பாக்கியம் அவர்களே

நிலைமாறி வெந்தமனம் ஆற

இந்நூலை உங்கள் பாதமலரில் சமர்ப்பிக்கின்றோம்



**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**

உ

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்



**திருச்சிற்றம்பலம்**

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே

# திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே.

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர்கறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரவெனன் கண் குளிர்ந் தனவே

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ணலேயெனை யாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணினாற்றிருக் கயிலையிலருந்தறின்கோலம்
நண்ணி நான் தொழ தயந்தருள் புரியெனப்பணிந்தார்.

## திருப்புகழ்

இறைவாமல் பிறவாமல் எனையான்சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொந் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்பெருமானே.

## வாழ்த்துப்பா

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்!
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**



# முருகன் துதி

எல்லாம் உலகமும் ஈனாய் நீயே
ஏகம்பம் ஏவி இருந்தாய் நீயே
பொல்லா வினையாய் அறுப்பாய் நீயே
நல்லாத நன்மை தருவாய் நீயே
ஞானசுடர் ஒளி விளக்காய் நின்றாய் நீயே
புகழ் சேவடி என்மேல் வைப்பாய் நீயே
திருவளக் அகலாத செண்பகச் சோதியாய்நின்றாய்நீயே

பரம்பரம் போற்றி பரமே போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
அறுகமும் உறுவமும் அனாதையாய்பலவந்தமாய் நின்றாய்
போற்றி போற்றி
அன்பு வேல் விளங்க அருள் வேல் விளங்க
சக்தி வேல் விளங்க வெற்றி வேல் விளங்க
வேல் வேல் விளங்க முருகா நீ விளங்கு
தாயும் விளங்க தந்தையும் விளங்க
சிவன் விளங்க சக்தி விளங்க
சர்வலோகமும் விளங்க
எம்பெருமான முருகனே எக்குரையையும்
மண்ணித்து என் அன்பும் பணிவும் பூசையும்
அன்புடன் ஏற்று அன்புடன் விளங்கு குருவே.

# சகல கலாவல்லி மாலை



## வெண்பா

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விற்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்ப ளிங்கு வாராதிடர்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டா உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலா வல்லியே (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே! (3)

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்!
வட நூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! (4)

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே!
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! (5)

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! (6)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலா வல்லியே! (7)

சொல் விற்பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல் வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல் விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! (8)

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே! (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே!

# கந்தர்சஷ்டி கவசம்



## காப்பு நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்!
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நி'டையும் கைகூடும்
நிமலரருள் கந்த சஷ்டி கவசந்தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா
சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
மந்திர வடிவேல் வருக வருக!

வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம்படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செகசுண செகசுண செகசுண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணிணைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!

பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடாந் தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுந்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பீரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

எல்லாப் பிணியும்  என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும்  செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக

அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்

நவமதன்எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழுவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெற்றி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்.

# அமரர். திருமதி. கந்தையா பாக்கியம்
## அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

நூற்றாண்டு காலம் வாழ்க நோய் நொடி இல்லாம வாழ்க என்று ஒரு கவிஞர் கூறினார். அதற்கினங்க ஓரளவு கிட்டதட்ட வாழ்ந்த வாழ்வு இவ்வுலகில் பலருக்கு கிடைப்பதில்லை அப்படி கிடைத்தவர்களின் வரலாறு தான் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலே கல்வி வளத்திலும் மண் வளத்திலும் மனித வளத்திலும் சிறந்து விளங்கிய இடமான மல்லாகத்தைச் சேர்ந்த சரவணன் வள்ளி பிள்ளைகளின் இல்லற வாழ்க்கையின் பயனாக 1931.05.04 நான்காவது புத்திரியாக பிறந்தவர்தான் பாக்கியம் என்பவராகும். இவரின் சகோதரர்கள் கணபதிபிள்ளை, தம்பிபுள்ளை, கண்ணகை, மாணிக்கம், இலட்சுமி, ஆகியோர் ஆகும். மல்லாகத்தில் கல்வி பயின்று வாழ்ந்த வேளையில் அவரின் எதிர்கால வாழ்வை எண்ணி கோப்பாயை சேர்ந்த கதிர்காம நாகமுத்து தம்பதிகளின் மூத்த மகனான கந்தைய்யா என்பவரை திருமணம் செய்து வைத்தார்கள்.

தனது கணவர் தொழில் நிமித்தமாக 1947ஆம் ஆண்டு திருகோணமலையில் சாம்பல் தீவு ஆத்திமோட்டையில் குடி வந்தனர். இவர் திருகோணமலை இலங்கை கடற்படைத்தளத்தில் (பிரிட்டிஸ்நேவி) ஊழியனாக சேர்ந்து கொண்டார். இவர்களுக்கு அரசாங்கத்தினால் சொந்த காணி வழங்கப்பட்டது. பாக்கியம் தனது இனிய இல்லறத்தின் பயனாக சோதிநாதன், சண்முகநாதன், பரமநாதன், நாகநாதன், புஸ்பநாதன், தவயோக நாதன், ஆகிய பாசம்மிக்க ஆறு ஆண் மகவுகளையும் பத்மாவதி, லீலாவதி, மங்களேஸ்வரி, சத்தியவதி, தனவதி, அகிலாண்டேஸ்வரி, எனும் ஆறு பெண் மக்களையும் பெற்று வாழ்கையில் இல்லற இன்பத்தின் உச்சிக்கே சென்று வாழலாயினர். இவ் வேளையில் ஆண் மகன் ஒருவரையும் பெண் மக்கள் இருவரையும் இடை நடுவில் இழந்து துன்பத்திலும் தேய்ந்தார் 12 புத்திர செல்வங்களை பெற்று மிக்க சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தார். இவர் ஆத்திமோட்டையில் மகளிர் சங்க தலைவியாகவும்

ஆத்திமோட்டை பாடசாலை உருவாகுவதற்கும் காரண கர்த்தாவாக இருந்தார். அதே வேளை ஆத்திமோட்டையில் முதல் முறையாக பலசரக்கு கடை வைத்து மிகச் சிறப்பான முறையில் வியாபாரம் செய்து வந்தார். அது மட்டும் அன்றி வேழாண்மை, மரவள்ளிதோட்டம், வெங்காயத்தோட்டம் போன்றவற்றை விருப்பத்துடன் ஈடுபட்டார். அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகக் கூடியவர். திருமதி. பாக்கியம் கந்தைய்யா என்பவர் அன்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார் திருமதி. பாக்கியம் குடும்பத்தினர் தமது பிள்ளைகளை இல்லற வாழ்க்கையில் இணைத்திட எண்ணி அதற்கு ஒழுங்குகளை சரிவர செய்தனர். பாக்கியம் கந்தைய்யா குடும்பத்திற்கு நாற்பத்தி மூன்று பேரப்பிள்ளைகளும் நாற்பத்து ஒன்பது பூட்ட பிள்ளைகளும் 05 கொப்பாட்ட பிள்ளைகளும் உள்ளனர். இவருடைய குடும்பம் ஆலவிருட்சம் போல் எங்கும் பரவியிருந்தது பிள்ளைகளைப்பெற்றெடுத்து வளர்பதில் சிலசங்கடங்கள் ஏற்பட்டாலும் அவை எல்லாவற்றையும் சமாளித்து வெற்றிக்கண்டார். அவரது கணவர் திரு. கந்தைய்யா 55வது வயதில் ஓய்வூதியப் பணம் பெறத்தொடங்கினார். இரண்டுபேரும் வாழ்ந்து வந்த வேளையில் அவர்களது காணியில் வேல் முருகன் சிற்றாலயம் அமைத்து வழிபட்டு வந்தனர் அதன் பின்னர் அக்கோயிலை புணரமைத்து கும்பாபிஷேகம் செய்து வைத்து அப்பகுதி மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றார். இவரின் சிறந்த பண்பாக நேர்மை, பொறுமை, மரியாதை, கடவுள் பக்தி என்பவற்றில் சிறந்து விளங்கினார். 66 வருட இல்லற வாழ்க்கையும் அன்னாருக்கு இறைவன் கொடுத்தருளினார். இவ் வேளையில் தனது கணவரான கந்தைய்யாவை 2013.12.07 இழந்து மனக் கவலையுடனும் துக்கத்துடனும் வாழ்ந்து வந்தார். அவர் இறந்து பத்துவருடங்கள் இப் பூமியில் வாழ்ந்து வந்த வேளையில் தனது 92 வது வயதில் இயற்கை எய்தினார். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றோம்.

## மகன்மார் புலம்பல்

அறுவரைப் பெற்று சீராட்டி வளர்த்து நல்வழி காட்டி அன்புக்காட்டிப் பாசம் காட்டி வயர்த்தீர்களே அம்மா பாசப்பிணைப்புக்களால் பண்பு தவறாமல் பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் வழியமைத்தீர்கள் பாதியில் ஒருவரை பறிகொடுத்தும் தேரவில்லை எங்கள் மனம் தேம்பி அழுகின்றோம் தென்பழனி முருகன் உங்கள் துணையிருப்பான் ஆறாது எங்கள் துயர் அழுதாலும் போதாது அம்மா ஒருமுறை எம்முன்னே வாருங்கள்

## மகள்மார் புலம்பல்

ஆசையுடன் பெற்று பாசமுடன் அன்புகாட்டி பாதியில் இருவரைப் பறிகொடுத்த சோகத்துடன் நேசம் குறையாது நிறைவாக எமைவளர்த்து நேர்மையுடன் வாழ்ந்த தெய்வமே எங்கள் அம்மா நூற்றாண்டு காண இன்னும் சில வருடமட்டும் நம்பியிருந்தோம் நாங்கள் எல்லோரும் கடற்றுவன் மனம் பொறுக்கமாட்டாமல் வந்து கொண்டு சென்று விட்டால் எங்கள் அம்மாவை

## மருமக்கள் கலங்கள்

மாமி என்றாலும் எங்களை மக்கள் என்றே
நினைத்தீர் மதிப்புடன் வாழ்ந்து எமக்கு வழி
அமைத்து கொடுத்தீர்கள் பாசமிகு மாமியே
பண்புடன் பழகினீர்கள் பற்றுவைத்தோம் உங்களை
மறக்கவே முடியவில்ல மோசமான இயமன்
உங்களிள் ஏன் வந்தான் காலம் வருமோ ஒருமுறை
உங்களை காண்பதற்கு

## பேரபிள்ளை, பூட்ட பிள்ளை, கொப்பாட்டபிள்ளை புலம்பல்

அம்மம்மா, அப்பம்மா, என்று வாய்நிறைய அழைப்போமே ஆசையுடன் அரவணைத்து அன்புகாட்டுவீரே அம்மா உங்களை இனி எப்போ காண்போமோ அந்நாளில் வாழ்ந்த வாழ்வு இனிமேல் வருமோ சொந்தமாக தோலில் ஏறி மடியில் கிடந்து துள்ளி விளையாட எம்மிடம் ஓடி வாருங்கள் அம்மா.

## பெறாமகன் புலம்பல்

மனத்தரையில் மகனைப்போல் என்னை சுகமாய் நினைத்தீர என் தெய்வமே சிறு வயதில் உங்கள் கைவிரல் பிடித்து என்னை கீழே விழாமல் பார்த்தவரே கேட்ட பொருளுக்கு பொய்யாக சிந்திய கண்ணீரை கூட மெய்யாக நினைத்து வாங்கித்தந்தீர்களே தெய்வமே உங்களையின்றி வேறுலகம் எனகில்லை நான் அறியவும் இல்லை அலைந்து திரிந்தாலும் அப்படி ஓர் இதயத்தை இதுவரை யாம் அறியேன் என் சித்தி கனவிலும் உங்கள் நினைவுகளை கண்ணீரால் வரைகின்றேன். உன் உயிர்காற்றில் சேரும் வரை என் கண்ணீர என்றென்றும் உங்கள் கல்லறையையே கழுவும் என்றும் நிலவைத்தொடும் உங்கள் நினைவுகளோடு....

இ.சின்னத்தம்பி

## தேற்றம்

வந்தவர்கள் எல்லாம் தங்கிவிட்டால்
மண்ணுலகம் தாங்குமா?
வாழ்ந்தது போதும் என்று சென்று விட்டால்
உலகம் மகிழுமா?
கறந்தபால் முலையேறுமா?
இறைவன் கணக்கை மாற்ற முடியுமா?
கலங்கிப்பயனில்லை கடவுளை நாடுவோம்.

# சுகவாழ்வுக்கான உணவு

**சராசரி ஒருவருக்கான போசணை**

உடலின் வளர்ச்சிக்கு நாளாந்த செயற்பாட்டிற்கும் உணவு அவசியம். இதன் அளவும் இதில் அடங்க வேண்டிய கூறுகளும் வயது. பால் உடல்நிலை. தொழில் எனும் பல காரணிகளுக்கு ஏற்ப மாறுபடும் தேவைக்கு அதிகமாகவோ, குறைவாகவோ உணவுகளை எடுப்பது ஆரோக்கியமானது அல்ல.

காபோவைதரேற்று - அல்லது மாப்பொருள் சக்தி தரும்.
புரதம் - வளர்ச்சிக்கு, சிதைவடைந்த இழையங்களை புதுப்பிப்பதற்கும் உதவும்.
கொழுப்பு - சக்தியை வழங்கும். சக்தியை சேமித்து வைக்க உதவும்.
விற்றமின்கள் கனியுப்புக்களும் - பாதுகாப்பு வழங்கும்.
நீர் - உடல் நிறையின் 60% ஆகும்.

ஆகவே ஒருவரது உணவு மேற்குறிப்பிட்ட எல்லாக் கூறுகளையும் கொண்டிருந்தால் சிறந்தது.

**போசணைக் குறைவுக்கான காரணங்கள்**

போசணை பற்றிய அறிவின்மை
பொருளாதாரக் கஸ்டம்
மூட நம்பிக்கைகள்
பிழையான சமையல் முறைகள்
சரியான அளவுகளில் உட்கொள்ளாமை
போலி விளம்பரங்களால் ஏமாறுதல்

**சில போசணைக் குறைபாடுகளால் ஏற்படும் அறிகுறிகள் நோய்**

காபோவைதரேற்று - வளர்ச்சி குன்றி இருந்தல்
புரதம் - குவாசியக்கோர் எனும் குறைபாடும் மூளை விருத்தி குன்றுதலும்
விற்றமின் A - கண், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள்
விற்றமின் B - சோர்வு, உடல் ளிவு கடைவாய்புண், வாய் அவியல்
வித்தமின் C - முரசிலிருந்து இரத்தம் கசிதல் (ஸ்கேவிநோய்).

இரும்புச்சத்து - குருதிச்சோகை
அயடீன் - கண்டக்கழலை. பிள்ளைகளின் வளர்ச்சி குறைபாடு
கல்சியம் - என்புருக்கிநோய்

**நிறை அதிகரிப்பதனால் ஏற்படும் தீமைகள்**

இருதயநோய்
பாரிசவாதம்
மூட்டுத்தேய்வு
நீரிழிவு
குடல்புற்றுநோய்
கருத்தரிக்கும் வாய்ப்பு குறைதல்
அழகின்மை

**தவிர்க்க வேண்டியவை**

அளவுக்கதிகமான கொழுப்பு உணவு
அடிக்கடி நொருக்குத்தீன் உண்ணல்
அதிக சீனிப் பொருட்கள் உண்ணல்
உணவுக்கு ஏற்ற உடலுழைப்பு இன்மை
அளவோடு சோறும் இலைக்கறி வகையும் பழங்களும் ஒழுங்கான உடற்பயிற்சியும் அவசியம்.


# நன்றி நவிலல்

**எமது குடும்பத்தின் தலைவியாய் இருந்து**
**நல்வழிகாட்டி வாழ வைத்த எங்களின்**
**அன்புத் தெய்வம்**

**அமரர்.கந்தையா பாக்கியம்**

**அவர்களின்**


மரணச் சடங்குகளில் மனமுருகி கலந்து
கொண்டோருக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து
உளம் ஆரச் செய்திகள் அனுப்பியோருக்கும்
மலர்வளையம் இட்டு மனம் உருகியோருக்கும்
மரணச்சடங்குகளில் பலவாறு உதவியோர்களுக்கும்
உற்றார் உறவினர்கள் நண்பர்கள்
மேலும் எம்முடன் கலந்து கொண்ட உள்ளங்களுக்கும்
31ம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டோருக்கும்
எமது இனிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்**
**ஆத்திமோட்டை**
**சாம்பல் தீவு**



## வளமான வாழ்விற்கு



தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்குப் போவதும்
இறைவனை வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

– சுவாமி விவேகானந்தர்

ART 0776566173